# கீர்த்தனையின் மகிமை

‘கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்போன் அவர் துதி எப்போதும் என் நாவிலிருக்கும்’.

கிறிஸ்துவ வாழ்வில் பாடல்கள் இன்பத்திலும் துன்பத்திலும் ஒலித்துக் கொண்டே இருக்க வேண்டும். திருச்சபை ஆராதனைகளிலும் பாடல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

கிறிஸ்துவ தமிழ்ச் சமுதாயத்தில் கிறிஸ்தவ கீர்த்தனைகள் மதிப்போடு போற்றப்பட்டு பாடப்படுகின்றன. கீர்த்தனைகள் சொல்வளம், பொருள்வளம் மிகுந்தவை. அதை இயற்றியவர்களின் தியாக வாழ்வு நமது வாழ்க்கைக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. கீர்த்தனைகள் ஒவ்வொன்றும் வேதாகமத்தின் அடிப்படையில் இயற்றப்பட்டுள்ளது. சில பாடல்களுக்கு சிறந்த பின்னணியும் உள்ளது. அப்படிச் சுவை மிகுந்த கருத்து வளம் மிக்க பின்னணியுடைய இரண்டு பாடல்களைப் பார்க்கலாம்.

**ஒரு கைதியின் பாடல்**

இயேசு நேசிக்கிறார், - இயேசு நேசிக்கிறார் ;
இயேசு என்னையும் நேசிக்க
யான் செய்ததென்ன மாதவமோ!

1. நீசனா மெனைத்தான் இயேசு நேசிக்கிறார்
   மாசில்லாத பரன் சுதன் தன் முழு
   மனதால் நேசிக்கிறார் - இயேசு

2. பரம தந்தை தந்த பரிசுத்த வேதம்
   நரராம் ஈனரை நேசிக்கிறாரென
   நவிலல் ஆச்சரியம் - இயேசு

3. நாதனை மறந்து நாட்கழித் துலைந்தும்
   நீதன் இயேசெனை நேசிக்கிறாரெனில்
   நித்தம் ஆச்சரியம் - இயேசு

4. ஆசை இயேசுவென்னை அன்பாய் நேசிக்கிறார்
   அதை நினைந்தவர் அன்பின் கரத்துள்ளே
   ஆவலாய்ப் பறப்பேன் - இயேசு
5. இராசன் இயேசுவின் மேல் இன்ப கீதம் சொலில்
   ஈசன் இயேசுயெனை தானே சித்தா ரென்ற
   இணையில் கீதஞ் சொல்வேன் - இயேசு

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கை யாழ்ப்பாணத்தில் தூக்குத் தண்டனை எதிர்ப்பார்த்த ஒரு கைதி இருந்தான். சிறைச்சாலையில் ஊழியம் செய்யும் ஒருவர் கைதிக்கு இயேசுவின் அன்பை தியாகத்தை எடுத்துக் கூறினார். உண்மையாய் மனம் திரும்பி அவரை ஏற்றுக் கொண்டால் அவர் எப்பேர்பட்ட பாவியையும் நேசிக்கவும் இரட்சிக்கவும் வல்லவராயிருக்கிறார் என்று போதிக்கப்பட்டார். தூக்குத்தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு முன் ஞானஸ்தானம் பெற்ற அவர் 'பிரெக்கன் ரிஜ்' என்று அழைக்கப்பட்டார். தூக்கிலிடப்பட்டபின் ஒரு துண்டுக் காகிதத்தில் கீழ்க்கண்ட பாடல் எழுதப்பட்டிருந்ததைக் கண்டார்கள். தன் வாழ்நாளின் அனுபவத்தை அப்பாடலில் அவர் எழுதியிருந்தார். அப்பாடல் இன்றும் நம் அனைவராலும் மகிழ்ந்து உற்சாகத்தோடு பாடப்படுகிறது.

கர்த்தரின் பந்தியில் வா – சகோதரா
கர்த்தரின் பந்தியில் வா  கர்த்தர் அன்பாய்ச்
சொந்த ரத்தத்தைச் சிந்தின
காரணத்தை மனப்பூரணமாய் எண்ணி – கர்த்தரின்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் வாழ்ந்த மரியான் உபதேசியார் சபையில் பணியாற்றிய போது ஒரு மூப்பருடன் மனத்தாங்கல் இருந்து வந்தது. அதனால் மூப்பர் ஆலய ஆராதனைகளிலும் திருவிருந்திலும் பங்கு பெறாமலிருந்தார். இதன் காரணமாக துயரடைந்த மரியான் உபதேசியார் அவர் வீட்டிற்குத் தானே சென்று திருவிருந்து மற்றும் ஆராதனையில் கலந்து கொள்ள வருந்தி அழைத்து கீழ்க்கண்ட பாடலை உருக்கமாகப் பாடினார்.

1. "ஜீவ அப்பம் அல்லவா? கிறிஸ்துவின்
   திருச் சரீரம் அல்லவா?
   பாவ மனங்கல்லோ?  உனக்காகப்
   பகிரப்பட்டதல்லவா?
   தேவ குமாரனின் ஜீவ அப்பத்தை நீ
   தின்று அவருடன் என்றும் பிழைத்திட"              - கர்த்த

2. தேவ அன்பைப் பாரு; கிறிஸ்துவின்
   சீஷர் குறை தீரு;
   பாவக் கேட்டைக் கூறு; – ராப்போசன
   பந்திதனில் சேரு;
   சாவுக்குரிய மா பாவமுள்ள லோகம்
   தன்னில் மனம் வைத்து அன்னியன் ஆகாதே    - கர்த்த

3. அன்பின் விருந்தாமே ; - கர்த்தருடன்

ஐக்யப் பந்தி யாமே;
துன்பம் துயர் போமே; - இருதயம்
சுத்த திடனாமே;
இன்பம் மிகும் தேவ அன்பின் விருந்துக்கு
ஏது தாமதமும் இல்லாதிப்போதே வா, - கர்த்த

இப்பாடலைக் கேட்ட மூப்பர் மனம் இரங்கி வருந்தி மன்னிப்புக் கேட்டுத் திருவிருந்தில் கலந்து கொண்டார். மரியான் உபதேசியாரின் மற்ற பாடல்களும் மிகவும் சிறப்பு பெற்றவை அவற்றுள்

''சுந்தர பரம தேவ மைந்தன் யேசு
கிறிஸ்துவிற்கு ஸ்தோத்திரம்'' என்ற

பாடலும் புகழ் பெற்ற பாடல்.

இவர் ஸ்ரீவைகுண்டம், ஏழாயிரம் பண்ணை ஆகிய பல ஊர்களில் தனது ஊழியத்தை முடித்து ஏழாயிரம் பண்ணையில் அடக்கம் செய்யப்பட்டார்.

இவர்கள் கிறிஸ்துவின் அன்பின் ஆழத்தை உற்றறிந்தும் உணர்ந்தும் வாழ்ந்தவர்கள். தெய்வீக ஞானத்தினால் காலத்தால் அழியாத, பல முறை பாடினாலும், திகட்டாத கீர்த்தனைகளை இயற்றினார்கள். அவை கிறிஸ்தவ வாழ்விற்கு இன்றியமையாதது. நமது முன்னோர்கள் நமக்குக் கொடையாகக் கொடுத்த இந்த அருமையான பொக்கிஷத்தை வேகமாக மாறிக் கொண்டிருக்கிற இந்தக் காலத்தில் நமது இளைய தலைமுறைகளுக்கு அதன் முக்கியத்துவத்தை அறிந்து போற்றவும் பாடவும் அறிந்து கொள்ள துணை நிற்போம்.

**டாக்டர். எஸ்.வி.ஆனந்தராஜ்**
கோயமுத்தூா